**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.30/2019.</u>**

பெயர் : தனஞ்செயன் D.W.1.

த/பெ. : இராமசாமி

தேதி : 19.08.2024

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

தாவா சொத்துக்கள் எனக்கு எனது தகப்பனார் எழுதிவைத்த உயிலின் படி எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனாரின் மறைவுக்கு பிறகு தாவா சொத்துக்கள் எனது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தினை நான் எனது மனைவி பெயருக்கு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் வாசாஆ2 ஆன ஆவணம் தான் தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆகும். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் படி எனது மனைவி தாவா சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். எனது மனைவி 3 வது பிரதிவாதியிடம் தாவா சொத்தை வைத்து பதிவுசெய்யப்பட்ட பெந்தககடன் பத்திரம் எழுதிக்கொடுத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தற்போது தாவா சொத்தின் பட்டாவானது எனது மனைவி பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

எனது மனைவி பெயரில் உள்ள ஆவணத்தின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் தான் 3ம் பிரதிவாதி எங்களுக்கு கடன் கொடுத்தார் என்றால் சரிதான். எனது மனைவி 3ம் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டிய கடன் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்றுவதற்காக நானும், எனது சகோதரரும், வஞ்சக கூட்டு சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் மனைவி வாங்கிய கடனை காலாவதி ஆக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு என் சகோதரரை வைத்து வழக்கு தாக்கல் செய்து வாதியும், நானும் வீண் காலதாமதம் ஏற்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

எனது தகப்பனார் ராமசாமி நாயுடு ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் பத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலில் Aபட்டியல் சொத்து எனது தாயார் முத்துலெட்சுமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். B பட்டியல் சொத்தானது வாதி ரெங்கபாஷ்யத்துக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். C பட்டியல் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். D பட்டியல் சொத்து கோவிந்தராஜ் என்பவருக்கும், Eபட்டியல் சொத்து ராஜன்பாபு என்பவருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். Fபட்டியல் சொத்து இரண்டு மைனர் ஆண்குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு பேட்டியல் சொத்தாக 8 ஏக்கர் 40–1/2 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி எனக்கு எதிராக 10 வழக்குகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்குகளின் எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி இந்த வழக்கை எத்தனை ஐட்ட சொத்திற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது வழக்கறிஞரை கேட்டால் தான் தெரியும். வாதி தாவா A பட்டியலாக காட்டியுள்ள சொத்து உயில்படி வாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் பாலகிருஷ்ணன் மகன் அருள்பிரசாத் என்பவர் உள்ளாரா என்றால் ஆம். அவரிடம் நான் சர்வே எண் 342/18 என்ற சர்வே எண் கொண்ட சொத்தை விற்பனை செய்துள்ளேனா என்றால் இல்லை, சாகுபடி செய்வதற்காகத்தான் கொடுத்துள்ளேன்.

அருள்பிரசாத் என்பவர் அந்த இடத்தில் தோட்டக்கலைக்காக மின் மோட்டார் இணைப்பு வாங்கியுள்ளார் என்றால் சரிதான். இதுநாள் வரை அருள்பிராத் என்பவர் தான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். சர்வே எண் 342/18 என்பது எனது அண்ணன் ரெங்கபாஷ்யத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தை நான் தான் அருள்பிரசாத்திற்கு சாகுபடி செய்வதற்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் 414/6B என்ற சொத்தானது உயிலின் படி எனது அண்ணன் பெயரில் உள்ளது என்றால் சரிதான் ஆனால் அந்த சொத்தானது எனது அனுபவத்தில் உள்ளது. எனது பெயரில் வணிக பயன்பாட்டிற்காக மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது என்றாலும், அதன் மின் இணைப்பு எண் 552–053–604 சரிதான். ஆனால் அந்த மின் இணைப்பு சர்வே எண் 414/6Bல் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண் 489/1, 2, 3, 4, 5 ஆகியவை எனது பெயரில் உயில் படி ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களில் அனைவருக்குமே பாகம் ஒதுக்கப்பபட்டுள்ளது. சர்வே எண் 489/1, 2, 3, 4, 5 ஆகியவை வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனது அனுபவத்தில் தான் உள்ளது. மேற்படி சர்வே எண்ணில் உள்ள சொத்துக்கள் எனது அனுபவத்தில் தான் உள்ளது என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

சர்வே எண் 489/1, 2, 3, 4, 5 ஆகிய சொத்துக்கள் எனது மனைவி பெயரில் 05.02.2014ல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் எனது அனுபவத்தில் இல்லை என்றாலும், தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் படி சொத்தை அனுபவம் எடுத்துக்கொள்ள வில்லை என்றாலும், அந்த சொத்தானது வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. எனது மனைவி பெயருக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் படி தாவா சொத்துக்களை எனது மனைவி 3ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட பெந்தககடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் எனது மனைவியிடம் தான் தாவா சொத்து அனுபவம் உள்ளது. 3ம் பிரதிவாதியிடம் இல்லை. நானும், எனது அண்ணனும் உயிலின் படி எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் எனது அண்ணனுக்கு ஒதுக்கப்பட்ட 2 ஏக்கர் 40–1/2 செண்ட் நிலத்தை நானும், எனக்கு ஒதுக்கப்பட்ட 2 ஏக்கர் 40–1/2 செண்ட் நிலத்தை எனது அண்ணன் அனுபவித்துக் கொள்வதற்காக வாய்மொழி பரிவர்த்தனை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், வாதிக்கும் வாய் மொழி பரிவர்த்தனை ஏற்பட்டது என்றாலும், அதன்படி எனது அண்ணனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தான் நான் பாலகிருஷ்ணன் மகன் அருள்பிரசாத்திடம் சாகுபடிக்கு நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

தாவா Bபட்டியலில் 1 முதல் 5 ஐட்டச்சொத்துக்கள் வாதிக்கும், எனக்கும் ஏற்பட்ட வாய்மொழி பரிவர்த்தனைப்படி வாதிக்கு ஒதுக்கப்பட்டு அதனை மறைத்து மோசடியாக நான் 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து, அதனை அனுசரித்து 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு பெந்தக அடமானம் வைத்துள்ளதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. அதனால் தாவா B பட்டியலில் உள்ள 1 முதல் 5 ஐட்டச்சொத்துக்கள் வாதியின் அனுபவத்தில் உள்ளது அதில் எந்த இடையூறும் செய்யக்கூடாது என்றுதான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. அதனால் தான் தாவா Bபட்டியலில் 1 முதல் 5 ஐட்டச்சொத்துக்களைப் பொறுத்து நான் எனது மனைவி பெயருக்கு 05.02.2014ல் எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சட்டத்திற்கு புறம்பான செயல் என வாதி விளம்புகை பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. அதேபோல தாவா Bபட்டியலில் 1 முதல் 5 ஐட்டச்சொத்துக்களை எனது மனைவிக்கு உரிமை இல்லாததால் அவர் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்து 24.12.2014 தேதியிட்ட பெந்தக கடன்பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. வாதிக்கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்ககத்தக்கது என்றால் சரியல்ல.

வாதிக்கும், எனக்கும் சொத்து சம்பந்தமாக பரிவர்த்தனை செய்து கொண்டோம் என்றாலும், தற்போது நான் வாதிக்கொடுத்த சொத்தை அதிக விலைக்கு போகும் என்பதால் அதனை அபகரிக்க வேண்டும் என முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைப்பத்தில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல.